செ.வெ.எண். 53/ஜூலை                                                    தேதி : 29.07.2016

**நல்லம்பள்ளி வட்டம், பாகலஅள்ளி ஊராட்சி, பச்சியப்பன் கொட்டாய் கிராமத்தில் அம்மா திட்ட முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**






தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், பாகலஅள்ளி ஊராட்சி, பச்சியப்பன் கொட்டாய் கிராமத்தில் அம்மா திட்ட முகாம் இன்று (29.07.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இம்முகாமில் குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம் செய்து 41 நபர்களுக்கும், வருமான சான்றிதழ் 1 நபருக்கும், சாதி சான்றிதழ் 1 நபருக்கும், பிறப்பு சான்றிதழ் 1 நபருக்கும் வழங்கி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வட்டங்கள் வாரியாக கிராமங்களை தேர்வு செய்து அம்மா திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் புதியதாக நல்லம்பள்ளி மற்றும் காரிமங்கலம் வட்டங்களை தந்துள்ளார்கள். கிராம மக்கள் சான்றிதழ்கள் கேட்டு வட்டாட்சியர் அலுவலகங்களை அணுக வேண்டியதில்லை. தமிழக அரசின் மின்னாளுமை திட்ட சேவை மையத்தின் மூலம் ஊராட்சிகளில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அலுவலகத்தில் இயங்கி வரும் பொது சேவை மையத்தில் விண்ணப்பித்து தங்களுக்கு தேவையான சாதி சான்று, இருப்பிடச்சான்று, வருமான சான்று, முதல் பட்டதாரி சான்று, சிட்டா நகல்கள், வில்லங்கச்சான்று, நில மதிப்பீடு சான்று போன்றவற்றை இணையதளம் வாயிலாக பெற்றுக்கொள்ளலாம். மேலும் சமூக நலத்துறையின் கீழ் வழங்கப்படும் மகளிர் திருமண உதவி திட்டம், ஏழை விதவை மகள் திருமண உதவி திட்டம், ஆதரவற்ற பெண்கள் நிதி உதவி திட்டம், பெண்குழந்தை பாதுகாப்பு திட்டம் உள்ளிட்ட இதர சேவைகள் பெறுவதற்கு தருமபுரி மாவட்டத்தில் 400 மின் ஆளுமை சேவை மையங்கள் செயல்பட்டு வருகிறது. பொது மக்கள் இத்திட்டத்தை பயன்படுத்தி கொள்ள வேண்டும். மேலும் பொது சேவை மையங்களில் சான்றுகள் கேட்டு விண்ணப்பிக்கும் போது தங்களது கைபேசி எண்ணையும் அளித்தால் தங்களது சான்று குறித்த தகவல்களை எஸ்.எம்.எஸ் வாயிலாக அறிந்த கொள்ளலாம். இத்திட்டத்தின் மூலம் அகில இந்திய அளவில் தருமபுரி மாவட்டம் 3-வது இடம் பிடித்துள்ளது. அனைத்து நியாய விலைக்கடைகளிலும் தமிழக அரசின் மின்னாளுமை திட்ட சேவை மையம் பயன்கள் குறித்த பதாகைகள் அமைக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி துறையின் மூலம் தனிநபர் கழிப்பறை அமைக்க அரசு ரூ. 12 ஆயிரம் வழங்கி வருகிறது. அதனை பெற்று அனைவரும் தனிநபர் கழிப்பறை அமைக்க முன்வர வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக தோட்டக்கலைத்துறை, சுகாதாரத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் சார்பில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்ததை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் நல்லம்பள்ளி ஒன்றியக்குழு தலைவர் திரு. எம். முனுசாமி, ஊராட்சிமன்ற தலைவர் திருமதி. மணிமேகலை, துணை தலைவர் திரு. கந்தசாமி, வட்டாட்சியர் திரு. கருப்பசாமி, துணை வட்டாட்சியர் திரு. ராஜராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி